**செய்தி வெளியீடு எண்: 80/2024** **நாள்: 17.10.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

**"HipHop Tamizha Return of the Dragon Machi! நிகழ்விற்கு M/s GSS Torque Entertainment LLP நிறுவனத்தால் ஸ்பான்சர் செய்யப்பட்ட பிரத்யேக QR பயணச்சீட்டு மூலம் சென்னை மெட்ரோவில் பயணம் செய்யுங்கள்**

நந்தனம் மெட்ரோ நிலையத்திற்கு மிக அருகில் உள்ள YMCA மைதானத்தில் 19.10.2024 அன்று நடைபெறவுள்ள "HipHop Tamizha Return of the Dragon Machi! நிகழ்விற்கு செல்லும் பயணிகளுக்கு தடையற்ற போக்குவரத்தை வழங்க சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், "M/s GSS Torque Entertainment LLP" உடன் இணைந்து ஸ்பான்சர் செய்யப்பட்ட மெட்ரோ பயணத்தை பயணிகளுக்கு வழங்குகிறது.

"Paytm Insider" மூலம் முன்பதிவு செய்யப்பட்ட டிஜிட்டல் டிக்கெட்டுகளுடன் நிகழ்வில் பங்கேற்பவர்களுக்கு மட்டுமே இந்த ஸ்பான்சர் செய்யப்பட்ட பயணம் வழங்கப்படும். இந்த முன்பதிவு செய்யப்பட்ட டிஜிட்டல் டிக்கெட்டுகளை பயன்படுத்தி பயணிகள் எந்த ஒரு மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்தும் நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு மிக அருகில் உள்ள நந்தனம் மெட்ரோ இரயில் நிலையத்திற்கு சென்று திரும்ப முடியும்.

நிகழ்வில் பங்கேற்பவர்கள் தங்கள் முன்பதிவு செய்யப்பட்ட டிஜிட்டல் டிக்கெட் உடன் வழங்கப்பட்டுள்ள Metro Pass-யை பயன்படுத்தி சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள தானியங்கி நுழைவு இயந்திரத்தில் ஸ்கேன் செய்து மெட்ரோவில் பயணிக்கலாம். இந்த சிறப்பு சலுகையை ஒரு சுற்றுப் பயணத்திற்கு (2 நுழைவு மற்றும் 2 வெளியேறுதல்) பயன்படுத்தலாம்.

நிகழ்ச்சி பங்கேற்பாளர்களின் கவனத்திற்கு, நந்தனம் மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்து விம்கோ நகர் பணிமனை மெட்ரோ நிலையம் வரை செல்லும் கடைசி இரயில் 00:15 மணிக்கும், விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையம் வரை செல்லும் கடைசி இரயில் 00:30 மணிக்கும் புறப்படும். பயணிகள் கடைசி இரயில் புறப்படுவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாகவே நந்தனம் மெட்ரோ இரயில் நிலையத்திற்குள் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பச்சை வழித்தடத்தில் பயணிக்கும் பயணிகள் சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் வழித்தட மாற்றம் செய்து கொள்ளலாம்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**